Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 9 (23-1-67) இதழ் 343
பராபவ ஷவ்வால் 11 தை 10 திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன்: 519
நகை மாளிகை
கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

## சிங்கங்கள் இறக்குமதி

ஜோஹன்னஸ்பேர்க், ஜன. 22

முன்பு உலகத்துக்குச் சிங்கங்களை ஏற்றுமதி செய்து வந்த தென் ஆபிரிக்கா, இப்போது அவற்றை ஐரோப்பிய மிருகக்காட்சிச் சாலைகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. (பி.டி.ஐ.)

# தேயிலை ஏற்றுமதி பகிஷ்கரிப்பு முடிவு

## திருமலை அரசாங்க அதிபர் தலைமையில் 'துறைமுகசபை'

கொழும்பு, ஞாயிறு

தேயிலை ஏற்றுமதி வேலைகளைப் பகிஷ்கரித்து வந்த இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்க ஊழியர் தங்கள் பகிஷ்கரிப்பு இயக்கத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளச் சம்மதித்துள்ளனர்.

திருக்கோணமலைத் துறைமுகத்தில் துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தும் பின்னர் அவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதும் அதைத் தொடர்ந்து திருக்கோணமலைத் துறைமுகத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த தேயிலை கொழும்புத் துறைமுகம்மூலம் ஏற்றுமதி செய்யப்படும் வந்தது. திருக்கோணமலைத் துறைமுகத் தொழிலாளர் தகராறுக்கு ஒரு தீர்வு காணப்படாமல் திருமலைத் துறைமுகத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த தேயிலையை கொழும்புத் துறைமுகம்மூலம் ஏற்றுமதி செய்ய அனுமதிக்க முடியாதென்று கூறி திருமலைமூலம் ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த தேயிலையை கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றுமதிசெய்யமுடியாதெனக் கூறி இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்க அங்கத்தவர்கள் பகிஷ்கரிப்பு இயக்கம் ஆரம்பித்தனர்.

### திருமலைத் துறைமுகசபை

தேயிலை ஏற்றுமதி பகிஷ்கரிப்பு நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிக்குமென அரசாங்கம் அஞ்சியதால் இப்பிரச்னைக்கு ஒரு முடிவு காண முயற்சி செய்யப்பட்டது.

இந்த முயற்சியின் ஓர் அம்சமாக தேசிய மயசேவைகள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ராஜேந்திரா, பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு ஜீ. வி. பி. சமரசிங்கா, தேயிலை வர்த்தக கம்பனி பிரதிநிதிகள், கப்பல் கம்பனி பிரதிநிதிகள், இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கப் பிரதிநிதிகள் ஒரு மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

இந்த மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட சமரச யோசனையை இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கம் ஏற்றுக்கொண்டது. இந்த யோசனையின்படி திருக்கோணமலை அர

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் 'சிக்கன' சுதந்திர தின வைபவம்

யாழ்ப்பாணம், திங்கள் அடுத்த மாதம் 4-ந் திகதி நடைபெறவிருக்கும் இலங்கையின் சுதந்திரதின விழாவை யாழ்ப்பாணத்தில் ஆடம்பரமற்ற முறையில் கொண்டாடுவதென யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற விசேஷக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம், தலைமைக்காரியாலய காரியாதிகாரி திரு. ஏ. கந்தையா, கடற்படை, தரைப்படை, பொலிஸ் பகுதி தலைவர்கள், இ. போ. சபை பிராந்திய அதிபர், காணி அதிகாரிகள், கல்வி அதிபதி, மாநகரசபை விசேஷ ஆணையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாட்டில் உள்ள உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் அவஸ்தைப்படும் இவ்வேளையில் அதிக பணத்தை செலவு செய்து ஆடம்பரமான முறையில் இதனைக் கொண்டாட வேண்டாமென உள்நாட்டு அமைச்சர் திரு. தஹநாயக்கா அறிவித்ததன் பேரிலேயே இந்தமுடிவு செய்யப்பட்டுள்ளது.

சுதந்திரதினத்தை முன்னிட்டு அன்றைய தினம் காலை யாழ்ப்பாணம் ஸ்ரேடியம் மைதானத்தில் அரசாங்க அதிபர் திரு வேர்ணன் அபயசேகரா தேசியக் கொடியை ஏற்றிவைப்பார். அதனை அடுத்து கல்லூரி மாணவர்களின் அணிவகுப்பு நடைபெறும். கடந்த ஆண்டுகளைப் போல் இரவு கலை நிகழ்ச்சிகள் எதுவும் இடம்பெறமாட்டாது. பொலிஸ் அணி வகுப்பொன்றை நடாத்தவும் அரசாங்க அதிபர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிகிறது. (ந. நி.)

## 'நாடு முன்னேறும்போதே நாம் முன்னேறலாம்'

### தோட்டத்தொழிலாளர் மத்தியில் திரு. தொண்டமான்

நாவலப்பிட்டி, ஞாயிறு

"தோட்டத் தொழிலாளர்களின் குறைபாடுகளை நேரில் அறிந்து செயலாற்றவே நான் விரும்புகிறேன். தொழிலாளர்கள் ஐக்கியத்தையும் இ. தொ. கா'வின் பலத்தையும் கண்ட சிலசுயநலவாதிகள் பொறாமையும் அதே வேளையில் பீதியும் அடைந்துள்ளனர்.

இவ்வாறு மஸ்கெலியா பெரிய சவிகுவத்தை தோட்டப் பாடசாலையில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மஸ்கெலியா மாவட்ட மகாநாட்டில் இ. தொ. கா தலைவரும் நியமன எம். பி. யுமான திரு. எஸ். தொண்டமான் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இந்த நாட்டில் கடந்த 150 ஆண்டுகளாக

(8-ம் பக்கம் பார்க்க)

## உணவு தர அமெரிக்கா விதித்துள்ள நிபந்தனை

### இந்தியா ஆராயும்

புதுடில்லி, ஜன 22

பாரதத்துக்கு உணவுப் பொருள்களை அனுப்புவைப்பது சம்பந்தமாக அமெரிக்கா விதித்துள்ள நிபந்தனை பற்றி ஆராய்ந்து இம்மாதத்தில் முடிவு வெளியிடப்படும் என பாரதப் பிரதமர் திருமதி இந்திரா தெரிவித்துள்ளார்.

கியூபாவுடனும் வடவியட்னாமுடனும் வர்த்தக உறவு வைத்துக் கொள்ளக்கூடாதென கோரப்பட்டுள்ளதாக பிரதமர் இந்திரா இந்த நிபந்தனைபற்றி எடுத்துக்கூறி வடவியட்னாமுடன் இப்போது இந்தியா வர்த்தக உறவு வைத்துக்கொண்டிருக்கவில்லையென்றும் ஏற்படும் சூழ்நிலைகளையும் சமாளிக்க மக்கள் தம்மை தயாராக்கி ஒத்துழைக்கவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

கிரிக்கெட்

## இலங்கையின் அபார ஆட்டம்

### முதல் இன்னிங்சில் 400 ரன்கள்
### நீல் சண்முகம்: 72 ரன்கள்

கொழும்பு, ஞாயிறு

இலங்கைக்கும் மேற்கிந்திய தீவுகளுக்குமிடையே நேற்று ஆரம்பமாகிய 3 நாள் உத்தியோகபூர்வமற்ற 'டெஸ்ட்' கிரிக்கெட் போட்டியில், இலங்கை தனது சகல விக்கெட்டுகளையும் இழந்து முதல் இன்னிங்சில் மொத்தம் 400 ரன்கள் எடுத்தது. உலகப் புகழ்பெற்ற மேற்கிந்திய ஆட்டக்காரர்களுக்கெதிராக இலங்கைத் துடுப்பு வீரர்களின் இந்தச்சாதனை பாராட்டத்தக்கதாகும்.

நேற்று மாலை டெஸ்டின் முதலாவது நாள் விளையாட்டின் இறுதியில் இலங்கை 8 விக்கெட் நஷ்டத்துக்கு 290 ரன்கள் அடித்திருந்தது.

இன்று காலை நேற்றைய ஆட்டக்காரரான நீல்சண்முகமும் விமலரத்னவும் இலங்கையின் ஆட்டத்தை ஆரம்பித்தனர். விமலரத்ன, தனது நேற்றைய ஸ்கோரான 4 ரன்களுக்கு மேலும் ஒரு ரன்னும் சேர்க்காது உடனேயே 'அவுட்' ஆகினார்.

பிறகு பி. ஐ. பீரிஸ் வந்து நீல் சண்முகத்துடன் சேர்ந்தார். இவ்விருவரும் மேற்கிந்திய பந்து வீச்சுக்காரரான ஹோல், கொலிமூர், சோபேர்ஸ், கொபிட், நேர்ஸ், கிங் ஆகியோரின் வீசிய பந்தை மைதானத்தின் பல பக்கங்களுக்கும் விளாசினார். இவர்களுடைய ஆட்டம் கண்ணுக்குக் கவர்ச்சியாகவும், உள்ளத்துக்கு உவகையூட்டுவதாகவும் அமைந்தது. நீல் சண்முகம் அபாரமாக விளையாடி 72 ரன்கள் எடுத்து இறுதியில் ஆட்டமிழக்கும்போது, இலங்கை 390 ரன்களிலிருந்து 400 ரன்களுக்குப் பாய்ந்துவிட்டது. பி. ஐ. பீரிசும் நன்கு விளையாடி ஆட்ட இறுதியில் 46 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமலிருந்தார். சண்முகமும், பீரிசும் ஒவ்வொரு "சிக்ஸர்" அடித்தனர். பவுண்டரிகளும் அதிகம் அடித்தனர். இவர்களிருவரும் 58 நிமிடங்களில் 110 ரன்களை விளாசித்தள்ளினர். ஈற்றில் சண்முகம் ஒரு பந்தை ஓங்கி அடித்தபோது, பந்து பிடிக்கப்பட்டு 'அவுட்' ஆகியபோது அதைப் பிடித்தவர் மேற்கிந்தியக் காப்டன் சோபேர்ஸ் ஆவார். இதுதான் இவர் பெரும் சாதனை.

இலங்கையின் 400 ரன்களும் 390 நிமிடங்களில்தான் எடுக்கப்பட்டன. இது எமது துடுப்பு வீரர்களின் திறமையும் துணிவும் பொருந்திய ஆட்டத்தின் சிறப்பையே எடுத்துரைக்கிறது.

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டியின் சார்பாக

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள்!

கோழிப்பண்ணையில் ஆர்வமுள்ள வாலிபர்களுக்கு எம்மிடம் 3000 குஞ்சுகள் கையிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். சேவல் விலை -/40 சதம். பேடு விலை ரூபா 2/50 சதம். அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 8318

காணி!

பண்டத்தரிப்பு பிரதான வீதியிலும் அடுத்தும் எனக்குச் சொந்தமான காணி விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் பொன்னையா திவாகராசா, பிரதானவீதி, பண்டத்தரிப்பு அவர்களுடன் தொடர்புகொள்ளவும். 8319

ரேடியோ

நல்ல நிலையிலுள்ள ஆறு ரோச் மற்றறியில் இயங்கும் நஷனல் ரான்ஸிஷ்டர் ரேடியோ விற்பனைக்கு உண்டு. 31/1,3-ம் ஒழுங்கை, மனோவி ரோட், சுந்தர் மடத்தில் விசாரிக்கவும். 8261

## பரிசோதனை

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சமாசத்திற்குக் கிடைத்த 350 மூடை சாவு விநியோகத்தில் ஏற்பட்ட அதிருப்தி பற்றி இணைச் சமாசங்கள் செய்த புகாரைத் தொடர்ந்து அரசாங்க அதிகார ஆணைப்படி சமாசம் பரிசோதனையிடப்பட்டது.

## ஐ. நா. சபைக்கு பிரிட்டன் உதவி

லண்டன், ஜன. 22

பிரிட்டன் கடந்த ஆண்டு மொத்தம் 27,700,000 பவுண்களை ஐ. நா. சபைக்கு கொடுத்திருக்கிறது. வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த ராஜாங்க மந்திரி திரு. ஜோர்ஜ் தொம்ஸன் இத்தகவலை வெளியிட்டார்.

### கல்வி

வகுப்புகள்

பயிற்சி பெற்ற ஆசிரியரால் சிங்கள வகுப்புகள், ஆங்கிலம், தமிழ் மூலம் பாலர்வகுப்பு முதல், ஜி.சி.ஈ வரை நடாத்தப்படும். ஐக்கிய கலைசாலை, தெல்லிப்பழை, அளவெட்டி. 8262

## புத்தூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

எமது சங்கத்துக்கு ஒரு உப மனேசர் தேவைப்படுகிறார், விண்ணப்பஞ் செய்பவர்கள் 5-2-67-ந் திகதிக்குள் கௌரவ காரியதரிசிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். அண்மையில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களும், பிறப்புப் பதிவுப்பத்திரமும் அனுப்பவேண்டும்.

தகுதிகள்

1. விசேட தகைமைகள்.
2. பொதுத் தராதரப் பரீட்சை சித்தியடைந்தவர்—விசேட சித்தி
3. கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர். விசேடம் வியாபார அனுபவம்.
4. 25 வயது—35 வயது.
5. பிணைரொக்கம் 1000/- ஆதனப் பிணை 2000/-
6. ஆரம்ப சம்பளம் 150/-
7. நிர்வாகசபைத் தீர்ப்பு

1053

சி. கனகசபை
கௌரவ காரியதரிசி

## 2வது வெற்றி வாரம்!


பிளாஸா (வெள்ளவத்தை)

கிங்ஸ்லி (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு) நவா (கொம்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (நிடுமலை)

மொடேர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்னபுரி) விஜிதா (ஹட்டன்)

ஆண்டவன் உலகத்தின் முதலாளி. அவனுக்கு நான் ஒரு தொழிலாளி. அன்னை உலகின் மடியின் மேலே அனைவரும் எமது கூட்டாளி.



எம்.ஜி.ஆர். - கே.ஆர். விஜயா

எம். ஆர், ராதா, அசோகன், நம்பியார், நாகேஷ், மனோரமா

நடித்த

தேவர் பிலிம்ஸ்

# தொழிலாளி

டைரக்ஷன்: திருமுகம்.

இசை: திரையிசைத் திலகம் கே.வி. மகாதேவன்

## வானொலி

திங்கள் 23-1-67

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சமய நற்சிந்தனை, 6-40 இறிஞ்சு தை நற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-20 நினைக்குறிப்பு, 7-30 குரல்வளை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-30 வளர்பிறை.

இரவு 6-15 பாட்டு—இசிஜா சுப்பிரமணியம், 6-45 இராமசஞ்சிகை, 7-15 விவேகச்சக்கரம், 7-45 தமிழ் மூலம் சிங்களம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நேயர் கடிதங்கள், 10-00 நேயர் விருப்பம்.

## 'சீனாவிடம் 100 அணுகுண்டு'

டோக்கியோ, ஜன. 22

சீனாவிடம் 100 அணுகுண்டுகள் இருப்பதாக டோக்கியோவிலிருந்து வெளியாகும் செய்தி ஒன்று கூறுகிறது. வலிமைமிக்க ஏவுகணைகளை அது வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4-வது வெற்றி வாரம்

சென்ரல (பருத்தித்துறை)
ஈஸ்வரன் (இவிதொசவ)
மற்றும் எண்டர்டெயின்மென்ட் திரைகளில்

இலங்கை நடிகர்களைக்கொண்டு உருவாக்கப்பட்ட திரைஓவியம்

டாக்ஸி ட்ரைவர்

டைரக்ஷன்: சுண்டிக்குழி சோமசேகரன்

ஸ்ரீ காலிங்கன் (இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி நடித்த
பணத்தோட்டம்

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் Jaffna
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
தாராசிங், கிங்கொங் நடித்த
மஹா பாரதம்

மனோஹரா
தினசரி பிற்பகல் 3-00, 6-30, 10-00
போயா தினங்களில் 10-30 முற்பகல்
கிளியோபட்ரா
பள்ளிக்கூடங்களுக்கு சலுகைகள் உண்டு
MANOHARA
Elizabeth Taylor, Richard Burton & Rex Harrison
in
CLEOPATRA
(Concessions to Schools available)

REGAL—JAFFNA
NOW SHOWING
CARY GRANT
AUDREY HEPBURN
in
CHARADE

யாழ். ஆஸ்பத்திரியில்

## டாக்டர்கள் மகாநாடு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் ஆரசினர் ஆஸ்பத்திரி சுகாதாரசேவை அத்தியட்சகர் திரு. எஸ். இராஜரத்தினம் சென்ற வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி விசேஷ டாக்டர்களைக் கொண்ட அவசர மகாநாடொன்றைக் கூட்டினார். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி திரு. பி. ஞானப்பிரகாசத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற இம் மகாநாட்டில் டாக்டர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

ஆஸ்பத்திரி நோயாளர்களுக்கு எக்ஸ் கதிர் படங்கள் எடுப்பது பற்றியும், அதில் எப்படியான முறைகளைக் கையாளவேண்டுமென்பது பற்றியும், அதற்கு டாக்டர்கள் எவ்வாறு ஒத்துழைக்கவேண்டுமென்பது பற்றியும் இங்கு விசேஷமாக ஆராயப்பட்டது.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு அவசர சிகிச்சையளிப்பதற்காக, ஆஸ்பத்திரியில் இவ்விதி மருந்துகளை, தனிப்பட்ட டிஸ்பென்சரிகளில் பணம் கொடுத்துவாங்குவது சம்பந்தமாகவும் இங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இன்னும் பல விஷயங்கள் இங்கு ஆராயப்பட்டன. (ந.நி)

## சங்கானை ஆஸ்பத்திரிக்கு புதிய பிரேத அறை

சங்கானை, ஞாயிறு

கடந்த பல வருடங்களாக சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் பிரேத அறை இல்லாதது ஒரு பெரும் குறையாக இருந்து வந்தது. சில சமயங்களில் இறந்தவர்களின் சடலங்கள் வார்ட்டிலேயே மற்றைய நோயாளிகளின் மத்தியில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. இதனால் நோயாளிகள் பீதியடைந்து ஆஸ்பத்திரியையே விட்டுச் செல்லவும் நேர்ந்தது.

சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. க. திருச்சிற்றம்பலம் பிரேத அறையின் அத்தியாவசியத்தை வலியுறுத்திச் சுகாதாரப் பகுதி அதிபருக்கு எழுதிய கடிதத்தில் இக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்யும்படி கோரியிருந்தார். அதன் பிரகாரம் தற்பொழுது இப்பிரேத அறையைக் கட்டுவதற்கு ரூபா 15,000 ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண சுகாதார அதிபர் சங்கானை பட்டினசபைத் தலைவருக்கு அறிவித்துள்ளார். இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

## பிரிட்டிஷ் பிரதமர் மீது தாக்குதல்

ஹொங்கொங், ஜன. 22

பிரிட்டிஷ் பிரதமர் ஹரோல்ட் வில்சனை 'ஜோன்ஸனின் அபிமான நாய்க்குட்டி' என வியட்காங் விடுதலை இயக்கத்தின் பத்திரிகை கண்டனம் தெரிவித்துள்ளதாக வடவியட்நாம் செய்தித்தாபனம் கூறுகிறது.

தென்வியட்நாமிலுள்ள அகதிகளுக்கும் பொருட்கள் விநியோகம் செய்ய உதவுவதற்காக ஒரு விமானத்தை சைகோனுக்கு அனுப்புவதென்ற பிரிட்டிஷ் தீர்மானத்தைத் தொடர்ந்தே இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது (பி.டி.ஸி.)

## 'புரட்சி மூலமே விமோசனம்'

பருத்தித்துறை, ஞாயிறு

'இறுபான்மைத் தமிழர் நாட்டின் முற்போக்குச் சக்தியான கம்யூனிஸ்ட் கட்சியினருடன் சேர்ந்து ஏழை மக்களுடனும் தொழிலாளி, விவசாயிகளுடனும் கூட்டணியாகி புரட்சி நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமே விமோசனத்தை அடைய முடியும்'

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரான திரு. வி. ஏ. கந்தசாமி தெல்லண்டை மூர்க்க மைதானத்தில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கூட்டத்துக்கு திரு. மா. செய்வேந்திரன் தலைமை தாங்கினார். திருவாளர்கள் வை. செந்திவேல், நீர்வை பொன்னையா, எம். முத்தையா, வி. தங்கராசா, பி. தம்பிமுத்து ஆகியோரும் பேசினர்.

## இளைஞரின் சிரமதானப்பணி

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இவ்வாண்டு 'கல்வெண்டி வீதி' சிரமதான மூலம் துப்புரவுசெய்யப்பட்டது. வீதி பருகில் வளர்ந்திருந்த பற்றைகள், புல், பூண்டுகள் என்பன அழிக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது இவ்வேலையை சென்.ஜேம்ஸ் இளைஞர் கழகம் மேற்கொண்டுள்ளது தொடர்ந்து இவ்வேலையை உள்ளூர் வீதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் பெருந்தொகையான இளைஞர் இம்முயற்சியில் ஈடுபட்டனர்.

## சுழிபுரத்தில் பதுக்கல்வேட்டை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் பகுதியில் நேற்று உணவுக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் பதுக்கல் வேட்டை நடத்தினார்கள். சுழிபுரத்திலுள்ள ஒரு பிரபல வர்த்தகஸ்தலத்தில் திடீர் பரிசோதனை செய்தபோது, சில பொருட்கள் கட்டுப்பாட்டு விலைக்கு மேலாக விற்கப்பட்டதாகவும், படிகள் சரியாக இல்லை என்பதும் கண்டுபிடிக்கப்பட்டு சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடாத்தினார்கள்.

## ஹரிமன் பாராட்டு

வேர்ஜினியா, ஜன. 22

அமெரிக்க உலகச்சுற்றுத் தூதுவரான அவெரெல் ஹரிமன், ஆஸ்திரேலிய நியூஸிலாந்து அதிகாரிகள்கோஷ்டி ஒன்றிடம், வியட்நாமில் உள்ள பிரச்னையை அவர்களது அரசாங்கமே சரியாகப் புரிந்துகொண்டுள்ளதாகத் தெரிவித்தார் (பி.டி.ஸி)

ஆண்களுக்கு மட்டும்

விசேஷ மலிவு விற்பனை

நைலோன் ஷேட்டுகள் அளவான கையருப்பு

வழக்கமான விலை ரூ. 24/-
மலிவு விலை ரூ. 18/-

பொகுமால்ஸ்

49, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு
உண்மை முழுவதும் எதிருரைசெய்யும் ஒருவன் ஈழம் வாழ்க.
— நற்சிந்தனை.

# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Pox 49 JAFFNA
Telegram EELANADU Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ வருடம் தை மீ 10 (23-1-67)

## சிக்கனமான சுதந்திரதினம்

சுதந்திரதினக் கொண்டாட்டம் இம்முறை சிக்கனமாகக் கொண்டாடப்படவிருக்கிறது. வாண வேடிக்கைகள், களியாட்டவைபவங்கள் இம்முறை நடைபெற மாட்டா. ஆடம்பரச் செலவுகள் அவசியமில்லை. நாட்டின் இன்றைய உணவு நெருக்கடியையும் பொருளாதார நெருக்கடியையும் உத்தேசித்து சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் சிக்கனமாக நடைபெற வேண்டுமென உள்நாட்டு அமைச்சர் டாக்டர் தகநாயக்கா உத்தரவிட்டிருக்கிறார். அமைச்சர் பாராட்டப்படவேண்டியவர்.

இந்த நாட்டு மக்கள் வயிறார உணவு உண்ணும் நிலையில் இல்லை. அரிசித் தட்டுப்பாடு ஒருபுறமிருக்க; உபஉணவுப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு. அரிசிக்கும் முக்கிய உபஉணவுப்பொருள்களுக்கும் இன்னும் வெளிநாடுகளையே நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். வாழ்க்கைச் செலவு விஷம்போல ஏறிக்கொண்டிருக்கிறது. நாட்டின் பொருளாதார நிலை இன்னும் சீரடையவில்லை.

சமூக ஒற்றுமை வலுப்பெறவில்லை. இந்நிலையில் இலங்கை பெற்ற சுதந்திரம் உண்மையான, பூரணத்துவம் பெற்ற சுதந்திரமாகக் கருத இடமில்லை.

சிக்கன நடவடிக்கையான இம்முறை சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் ஆடம்பரமின்றி நடைபெறவிருப்பதாயினும் இலங்கை பொருளாதார சுதந்திரம் பெறும்வரையில் சுதந்திரதினத்தை பெரிய அளவில் கொண்டாடுவதற்கு நியாயமில்லை. எனவே பொருளாதார சுதந்திரம் பெறுவதற்கு இலங்கை மக்கள் சங்கற்பம் செய்ய வேண்டும். இதுவே சுதந்திர தினப் பிரகடனமாக இருக்கவும் வேண்டும்.

## "கடும் நடவடிக்கை"

உணவுப் பொருள்களைப் பதுக்கல் செய்வோர் மீதும் கொள்ளை லாபம் அடிப்போர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கத் தயங்கப் போவதில்லையென்றும் அவசர கால சட்டத்தின் புதிய சட்ட விதிகள் எதையும் கொண்டு வந்து அமுல் நடத்த தமக்கு அதிகாரமிருக்கிறதென்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா டெடிகம தொகுதியில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார். பிரதமர் 'கடும் நடவடிக்கை' பற்றி பேசியிருப்பது இதுதான் முதல் தடவையல்ல. பிரதமர் மட்டுமல்ல அமைச்சர்களும் உணவு இலாகா அதிகாரிகளும் 'கடும் நடவடிக்கை' பற்றி அடிக்கடி பேசுவதும் அறிக்கை விடுவதுமாகவே இருக்கின்றனர். 'கடும் நடவடிக்கை' நடைமுறையில் காணப்படவில்லை. அதனால் பயனும் ஏற்படவில்லை.

பதுக்கல்காரர் மீதும் கொள்ளை லாபமடிப்போர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று மிரட்டுவது போதாது. மிரட்டுவதால் பதுக்கப்பட்ட பொருள்கள் வெளிவருமென்றும் கொள்ளை லாபமடிக்க அஞ்சுவார்களென்றும் அமைச்சர்களும் உணவு இலாகா அதிகாரிகளும் எதிர்பார்க்கலாம். இத்தனை காலமாக மிரட்டலுக்கு அஞ்சாதவர்கள் இனித்தானா அஞ்சப்போகிறார்கள்?

வர்த்தகர்கள் எல்லோரும் நீதியும் நியாயமுமுள்ளவர்களாக இருப்பார்களென்று எதிர்பார்க்க முடியாது. இலாபம் சம்பாதிப்பதுதான் வர்த்தகர்களின் "தொழில்" என்ற மனப்பான்மை பலர் மனதிலும் வேரூன்றிவிட்டது. இலாபமில்லாமல் வர்த்தகம் செய்ய முடியாது. ஆனால் கொள்ளை லாபமடிப்பது தான் தவறானது. நாட்டில் உணவு நெருக்கடி நிலவும் இச்சமயத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பதுக்கல் செய்வதும் அவற்றில் கொள்ளை லாபமடிப்பதும் மனிதப்பண்பற்றதுமட்டுமல்ல சமூக விரோதமான செயலுமாகும். இவ்வித செயல்களில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதை பொதுமக்கள் நிச்சயம் ஆதரிப்பர். பஞ்சாப் ராஜ்யத்தில் பதுக்கல்காரர், கொள்ளை லாபமடித்தோர் கைவிலங்கு மாட்டப்பட்டு வீதிகளில் கொண்டுசெல்லப்பட்டனர். இது அங்கு இத்தீய நடவடிக்கைகள் குறைவதற்குக் காரணமாக இருந்தது.

பதுக்கல், கொள்ளை லாபமடிப்போர் மீது நடவடிக்கை எடுக்கும் அதே சமயம் இவற்றை ஒழித்துக்கட்டும் திறமையற்றிருக்கும் உணவுக் கட்டுப்பாட்டிலாகாவைப் புனரமைப்புச் செய்வது பயனுள்ளதாக இருக்கும். பங்கீட்டரிசியின் அளவு குறைக்கப்பட்டபொழுது கோதுமை மாவு தாராளமாக கையிருப்பிலிருப்பதாக உணவு அமைச்சு அறிவித்திருந்தது. ஆனால் பின்னர் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதும்; "மாவுக் கப்பல் வந்துவிட்டது! இறக்குமதியில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. விரைவில் தட்டுப்பாடு நீங்கிவிடும்" எனத் தெரிவித்தனர். மாவு தாராளமாக இருக்கிறது என்று முன்னர் அறிவித்த பின்னர் அதற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதும் மாவு பதுக்கப்பட்டுவிட்டதாகவே மக்கள் கருதுவர். இத்தகைய தப்பெண்ணம் ஏற்படாமல் செய்வதற்கும் பதுக்கல், கொள்ளை லாபத்தை இடமில்லாது செய்வதற்கும் பலநோக்கு சமாஜங்களுக்கும் கூப்பன் கடைகளுக்கும் வாராவாரம் விநியோகிக்கப்படும் மாவின் தொகை விபரத்தை வெளியிடுவது தக்க நடவடிக்கையாக அமையலாம்.

# கேடயம் பெற்ற பத்திராதிபர்

பதினொன்றாவது தமிழ் எழுத்தாளர் மகாநாடு சென்ற மாதம் சென்னை ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. இம்மகாநாட்டில் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டவர்களில் ஒருவரான திரு தி.ஜ.ர. ஈழத்து இலக்கிய அன்பர்களின் அபிமானத்துக்கு உரியவர். அவரைப்பற்றி திரு.ஏ. கே. செட்டியார்:-

கிராமப் பள்ளியில் நான்காவது வரை படித்த ஒருவர், தன் சுய முயற்சியால் கற்றுணர்ந்து, இன்று தமிழ் நாட்டில் உள்ள சிறந்த பத்திரிகையாளர்களுள் ஒருவராய்த் திகழ்கிறார். அவர் தான் திங்களூர் ஜகத்ரக்ஷகன் ரங்கநாதன்.

அறுபத்தைந்து வயது நிறைந்த தி. ஜ. ர. ஆரம்ப முதல் காந்தி பக்தர். அந்நாளில் பத்திரிகைத்தொண்டு புனிதமானதேசத்தொண்டு. ஒவ்வொரு எழுத்தாளனும் தேச பக்தன். நாட்டின் விடுதலைக்காகச் சிறை சென்ற எழுத்தாளர்கள் திருக்கூட்டத்திலே, நம்மிடையே வாழும் மிகச் சிலரில் ஒருவர் தி.ஜ.ர.

தி.ஜ.ர. தோற்றத்தில் மிக எளியவர். சிறிதும் ஆடம்பரமில்லாதவர். அதைப் போலவே அவருடையதமிழ் நடையும் மிக எளியது. சிறிதும் ஆடம்பரமில்லாதது. உணர்ச்சி வசப்படாமல் எதையும் நன்கு ஆய்ந்து, கண்ணியமாகவும், நிதானமாகவும், ஆனால் உறுதியாகவும் எழுதுவது தி. ஜ. ர. வின் பண்பு.

நாற்பத்திரண்டு ஆண்டுகளாகப் பத்திரிகைத் துறையில் சிறந்த அனுபவம் பெற்றவர் தி.ஜ.ர. 'தமிழ் நாடு', 'ஜயபாரதி', 'நவமணி', 'சமரச போதினி', 'ஊழியன்', 'சுதந்திரச் சங்கு', 'ஹனுமான்', 'ஹிந்துஸ்தான்', 'ராஷ்டிரவாணி', 'சக்தி', 'பாப்பா' முதலியவற்றில் பணியாற்றிய தி.ஜ.ர., சென்ற இருபது ஆண்டுகளாக 'மஞ்சரி'யின் ஆசிரியராக இருந்து வருகிறார்.

பத்திரிகைத்துறையில் தி.ஜ.ர.விடம் தீட்சை பெற்றவர்கள் தமிழ்நாட்டில் பலர். இளம் எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தும் இனிய சுபாவம் உள்ளவர் தி.ஜ.ர.

செய்வன திருந்தச்செய்பவர் தி.ஜ.ர. ஆங்கிலத்திலிருந்து தமிழில் அவர் மொழிபெயர்த்தவை எண்ணற்றவை. ராஜாஜியின் 'அபேதவாதம்', வெண்டல் வில்கியின் 'ஓர் உலகம்', ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயாவின் 'கூண்டுக்கிளி' முதலியவற்றைக் குறிப்பிடலாம். 'ஆங்கிலமூல உருவில் பிரபலமான நூல் ஒன்றைத் தெளிவாய்ப் புரியாத ஒரு தமிழ் நடையில் நம் மொழிபெயர்த்துப்படிக்கமுடியாத ஒன்றாக்கி விடுவோமானால், அது மூல ஆசிரியருக்கும் துரோகம்; நமக்கும் ஆத்ம துரோகம்' என்கிறார் தி.ஜ.ர.

ஏராளமான கதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார் தி.ஜ.ர. அவற்றில் பல புத்தக உருவில் வெளிவந்துள்ளன. விஞ்ஞானம், பெரியோர் வாழ்க்கைச்சம்பவங்கள் முதலியவற்றில் அவருக்கு விருப்பம் அதிகம். ஒருமுறை சினிமாவுக்குக் கதையும் வசனமும் எழுதியுள்ளார்.

குழந்தைகள் இலக்கியத்திலே தி.ஜ.ர.வுக்கு நிறைய ஆர்வம் உண்டு. 'பாப்பாவுக்குக் காந்தி' அவருடைய சிறிய முயற்சி.

தி.ஜ.ர. அடக்கமே உருவானவர். விளம்பரத்தை விரும்பாதவர். சுமார் நாற்பதாண்டுகளுக்கு மேலாக, மாதப்பத்திரிகை முதல் தினப்பத்திரிகைவரை ஆசிரியராக இருந்துவந்திருக்கிறார். அப்படியிருந்தும், அவர் தம் பத்திரிகைகளைத் தமது சொந்த விளம்பர சாதனமாக உபயோகித்ததில்லை; அன்றியும், பத்திரிகை விற்பனையை அதிகரிப்பதற்காகவோ அல்லது ஒரு சில வாசகர்களை மகிழ்விப்பதற்காகவோ அவர் ஒருபொழுதும் தரக்குறைவாக எழுதியதுமில்லை. இவை அவருடைய பண்புகளில் தலைசிறந்தவை.

தி.ஜ.ர.வுக்குப் பிரியமானவை இரண்டு. ஒன்று இலக்கியம்; மற்றொன்று சதுரங்கம்.

## 'தாய் மொழியில் நாட்டம் வேண்டும்'

வல்வெட்டித்துறை, ஞாயிறு

'வறுமையில்பிறந்து அதில் வளர்ந்து கல்வியில் ஊக்கம் செலுத்தி பெருமையடைந்தவர் சைவப் புலவர் பரமகுரு. அவரின் வழியை இன்றைய இளைஞர்கள் பின்பற்றி கல்வியில் நாட்டம் கொண்டு பயனடைய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.'

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு எம். சிவசிதம்பரம் வல்வெட்டி வளர்மதி நூல் நிலையத்தின் ஸ்தாபகரும் சைவப் புலவருமான காலஞ்சென்ற திரு. பரமகுருவின் படத்தை திரைநீக்கம் செய்துவைத்துப் பேசுகையில்மேற்கண்டவாறு கூறினார்.

சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் நமது தாய்மொழியாம் தமிழை புறக்கணியாது கற்று அதில் பாண்டித்தியம் பெற்று வெற்றியும் கண்டவர். திரு பரமகுரு அவர்களைப் போன்றோர் இக்காலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் இல்லாததைவிட்டு நாம் மிகவும் கவலைப்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம். நாம் தாய்மொழியான தமிழை அன்புடன் கற்றுவருவோமானால் எதிர்காலத்தில் நமது மொழியைப் பற்றி [illegible] என்றார்.

# வியாபாரக் கயமை

நேற்று முன்தினம் ஓர் அன்பர் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஒரு பலசரக்குக் கடைக்குச் சென்றார். கடையில் அந்த அபூர்வமான வஸ்து கொடுக்கிறார்களாம் - அதுவும் கொஞ்சம் கிலோக்கு - என்று கேள்விப்பட்டுக் காலை எட்டு மணிக்கே, கந்தோருக்கு அரைநாள் லீவு எழுதிக்கொடுத்துவிட்டு, கடை வாயிலைக் காத்துக்கொண்டு நின்று தவம் செய்தார். அவர் மட்டும் தனியே நிற்கவில்லை. மிளகாயோடு சேர்த்து அரைத்து கறிக் கூட்டு செய்யும் அந்த வஸ்துவுக்காக இன்னும் பலர் தவம் செய்து கொண்டு நின்றார்கள்.

கடை ஒன்பது மணிக்குத் திறந்ததும் முன்னும் பின்னும் மனித சடலங்கள் முட்டித் தள்ள ஒருவாறு உள்ளே நுழைந்து இரண்டு ரூத்தல் மல்லியை வாங்கிவிட்டார்.

### நாட்டிலும் நகரிலும்

அந்த அபூர்வ பண்டம் கிடைத்துவிட்ட புழுகத்தில் அவர் கடைக்காரர் கட்டிக் கொடுத்த பார்சலை அவிழ்த்தும் பார்க்கவில்லை. யாராவது அதில் பங்கு கேட்டு விடுவார்களோ என்ற பயம் வேறு!

நேரே வீட்டுக்குப்போய், ஆகாய கங்கையை பூமிக்குக் கொண்டு வந்த பகீரதன் போல, வீரப் புன்னகை புரிந்தவாறே "ஏ, பெண்ணே! பார்த்தாயா இவர் கொண்டு வந்துவிட்டார்! உடனே குடிநீர் வைத்து குழந்தைக்குக் கொடுப்பாயாக" என்று கூறிய வண்ணம் பார்சலை தமது மனைவியின் முன் வைத்து அவிழ்த்தார்.

அவ்வம்மையார் அதிலிருந்த பொருளை தன் கரங்களால் அன்புடன் அளவிப் பார்த்துவிட்டு கணவனை நோக்கி ஒரு பார்வையை ஏவினார். அந்தப் பார்வையில் "இவ்வளவுதானா உமது கெட்டித்தனம்?" என்ற கேள்விக்குறி காணப்பட்டது.

ஏனென்றால் அந்த இரண்டு ரூத்தல் மல்லியிலும் அரை ரூத்தலுக்கு மேல் மணலும் கல்லும் இருந்தன.

ஃ ஃ ஃ

எத்தனை எத்தனை பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறதோ அத்தனைக்கத்தனை வியாபாரிகளுக்கு படு குஷியாய்ப் போய்விடும். தட்டுப்பாடு நீங்குவதற்கு முன் கொள்ளையடித்து தனவந்தர்களாகி விடலாமென்று நினைத்து விடுவார்கள். அதனால் எந்தக் கீழ்த்தர நடவடிக்கைகளிலும் அவர்கள் இறங்கத் தயங்கமாட்டார்கள்.

எல்லா வியாபாரிகளுமே இப்படிப்பட்டவர்கள் என்றும் கூற முடியாது. கண்ணியமாக வியாபாரம் நடத்துகிறவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் நடத்தும் தொழில்மூலம் ஏதோ வாழ்க்கைச் செலவுகளுக்குப் போதிய லாபம் கிடைத்தால் போதுமென்ற நினைவில் நேர்மையாக நடந்து கொள்வார்கள். இவர்களை உலகம் போற்றும். மற்றவர்களை உலகம் தூற்றும்.

சில்லறைக் கடைகளில் இப்படிக் கொள்ளை லாபம் என்றால் லட்சக் கணக்கில் நடக்கும் கொள்ளைகளைப் பற்றி என்னவென்று சொல்வது?

இலங்கையில் உற்பத்தியாகும் தேயிலை பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதல்லவா? இலங்கைத் தேயிலைக்கு இங்கிலாந்தில் விலை ரூத்தல் எட்டரை ரூபாய், அமெரிக்காவில் சுமார் இருபத்தைந்து ரூபாய். இவ்வளவு விலை கொடுத்து வாங்கி அந்தத் தேயிலைப் பாக்கட்டை திறந்து பார்க்கும்போது அதில் அரை ரூத்தல் மண்

(5-ம் பக்கம் பார்க்க)

## எம். ஜி. ஆர். குணமடையும்வரை...

உடுவில், ஞாயிறு

புரட்சி நடிகர் எம் ஜி இராமச்சந்திரன் பூரண குணமடைந்து வரும்வரையில் உடுவில் வாழும் திருவாளர்கள் கி. சண்முகம், கே. துரைசிங்கம், எம். பத்மநாதன், எஸ். சுந்தரலிங்கம் ஆகிய நான்கு இளைஞர்களும் தமது தாடியினையும் மீசையினையும் வெட்டுவதில்லை என்று சபதம் பூண்டதாகத் தெரிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களை முந்திச் செல்ல

BSA

பி. எஸ். ஏ.

கோல்டின் டிலக்ஸ் ரேட்ஸ்டர் சைக்கிள்களையே தெரிவு செய்யுங்கள்



- உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
- நீடித்த உறுதி வாய்ந்தது
- வசதிக்குச் சாதகமான அமைப்பு
- 'டெரி-டைப்' சீட்டுகள்

துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு ஒரு பி. எஸ். ஏ. யில் செல்லுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:

கார்கில்ஸ் (இலங்கை) லிமிடெட்


## மிருதங்க அரங்கேற்றம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு: காரைநகரைச் சேர்ந்த செல்வன் சிவசண்முகசுந்தரத்தின் மிருதங்க அரங்கேற்றம் இம்மாதம் 25-ந் திகதி வாரிவளவுப் பிள்ளையார் ஆலயமுன்றலில் நடைபெறவிருக்கிறது.

காரைநகர் இந்துக்கல்லூரி திரு ஆ. தியாகராசா தலைமை தாங்குவார். வட்டுக்கோட்டை எம். பி. திரு அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், வித்துவான் கே. முருகேசன், புலவர் செல்லைபூரணம் ஆகியோர் ஆசியுரைவழங்குவர்.

## சரித்திர ஆசிரியரில்லை

உடுவில், ஞாயிறு: சுன்னாகம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இந்தியசரித்திரம் படிப்பிப்பதற்கு ஆசிரியரில்லை. இந்திய சரித்திரம் கற்பித்துவந்த ஆசிரியர் திரு வ. பொன்னம்பலம் தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்று மாற்றலாகி சென்ற பின் இந்தியசரித்திரம் கற்பிக்க இங்கு ஆசிரியர் இல்லாமையால் கல்விப்பொதுதராதர பத்திர உயர்தர வகுப்பு மாணவர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

## உப-உணவுப்பொருள் விநியோகம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு: சென்ற வாரம் தீவுப்பகுதியில் மல்லி முதலிய உபஉணவுப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டன. இவ்வாரம் வேலணைத்தீவில் மல்லிமிளகாய் விநியோகம் செய்யப்படுகிறது. புங்குடுதீவில் இவ் வாரமும் மல்லி, மிளகாய் விநியோகம் செய்யப்படுகிறது. மாவு ஒரு கூப்பனுக்கு இரண்டு றாத்தல் வீதம் கொடுக்கப்படுகிறது.

## உதைபந்தாட்ட லீக் போட்டிகள்

யாழ்ப்பாணம், இசு. யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட சங்கத்தின் 66 67 லீக் உதைபந்தாட்டப் போட்டிகள் 25-ம் திகதி ஆரம்பமாகும். முதற்பிரிவில் எட்டு கோஷ்டிகளும் 2-ம்பிரிவில் 12 கோஷ்டிகளும் கலந்துகொள்ளும். 2-ம் பிரிவு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 25-ம் திகதி நடைபெறும் போட்டிகளில் நாவாந்துறை சென்நிக்கலஸும் குருநகர் யுனைட்டெட்டும் மோதிக்கொள்ளும். மற்றுமொரு போட்டியில் சென் மேரிஸும் கிறீன் பீல்டும் மோதிக்கொள்ளும்.

## யாழ் மாவட்ட உடற்பயிற்சி போட்டி

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு: வடமாநில கல்வியதிகாரி திரு எஸ். தணிகாசலம் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையொன்றில் யாழ்மாவட்ட உடற்பயிற்சிப் போட்டியொன்று மார்ச் 28-ம், 29-ம் திகதிகளில் நடைபெறுமென்றும் முதன்முறையாக இவ்வாண்டு ஆரம்ப பாடசாலைகளில் இருக்கும் மாணவருக்கான அகில இலங்கைப் போட்டியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயும் அறிவித்துள்ளார். இப்போட்டியில் 6 தொடக்கம் 11 வயதுக்குட்பட்ட மாணவரும் 11 தொடக்கம் 13 வயதுக்குட்பட்ட மாணவரும் பங்குபற்றலாமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாவட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுபவர்கள் கொழும்பில் ஆனி மாதம் நடைபெறவிருக்கும் அகில இலங்கைப்போட்டியில் பங்குபற்றலாம். இத்துடன் ஆண்டுதோறும் வழக்கமாக நடைபெறும் சுதேச பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டியும் இப் போட்டியுடன் நடைபெறும்.

## 9 பிள்ளைகளின் தாய் கொலை

### கணவன் பொலிஸில் சரண்

சாவி, ஞாயிறு: அக்மீமன பொலிஸ் பகுதியைச் சேர்ந்த ஒன்பது குழந்தைகளின் தாயான 45 வயதுடைய ஹினிநோனா என்பவர் அவரது கணவரால் குத்திக் கொலைசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாகத் தேடப்பட்டு வந்த இறந்தவரின் கணவரான பாபிசின் (55) கொலைசெய்வதற்கு உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் கத்தியுடன் அக்மீமன பொலிஸ் நிலையத்தில் சரண்புகுந்துள்ளார்.

இக்கொலை சம்பந்தமாக ஸ்தலத்தில் விசாரணை நடத்திய சமாதானநீதவானும் உத்தியோகப்பற்றற்ற மாஜிஸ்திரேட்டுமான திரு டடலி சமரவிக்கிரமா எதிரியை இம்மாதம் 26-ம் திகதிவரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

கொலைசெய்ததாகக் கூறப்படும் பாபிசிஸும் கொலையுண்ட அவரது மனைவியும் பிரிந்து வாழ்ந்து வந்ததாகவும் சம்பவ தினத்தன்று வேலையால் திரும்பி வந்துகொண்டிருந்த பாபிசின் தமது மனைவியை தம்முடன் வந்து வாழ்க்கை நடத்துமாறு கேட்டதாகவும் ஹினிநோனா இதற்கு மறுத்ததாகவும் இதைத் தொடர்ந்தே பாபிசின் அவரைக் கொலைசெய்ததாகவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.


'ஈழநாடு' பத்திரிகை ஸ்தாபனம்

ஜனவரி 25, 1967 புதன்கிழமை

அன்று பிற்பகல் 4 மணிக்கு

யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில்

கார்கில்ஸ் (லிமிட்டெட்) ஸ்தாபனத்தாரின்

ஆதரவுடன் நடாத்தும்

# பி. எஸ். ஏ. சைக்கிள் ஓட்டப்பந்தயம்

நிகழ்ச்சிகளில் விளையாட்டுப் பிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர்

திரு. வேர்ணன் அபயசேகரா

பரிசில்களை வழங்குவார்.

பரிசளிப்பு: மாலை 6 மணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு சைக்கிள் ஓட்டப்போட்டி

# வெற்றிபெற வீரர்கள் வேகம் கொள்கிறார்கள்

## 25-ம் திகதிவரை பொறுத்திருங்கள் பி. எஸ். ஏ. சைக்கிள் கிடைக்கும்

சைக்கிளோட்ட வீரர்கள் ஆர்வமிகுதியால் துடிதுடித்துக்கொண்டிருக்கிறார்கள்! 'ஈழநாடு' ஆதரவிலான 'பி. எஸ். ஏ.' சைக்கிளோட்டப்போட்டியில் கலந்துகொண்டு 'பி. எஸ். ஏ.' சைக்கிள் ஒன்றைத் தட்டிக்கொள்ள மும்முரமாகப் பயிற்சியில் குதித்திருக்கிறார்கள்.

மூலைமுடுக்குகளிலெல்லாம் "பி. எஸ். ஏ." சைக்கிளில் பறந்து பழகுகிறார்கள் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்கள்! இருபத்தைந்தாம்தேதி, அதாவது வருகிற புதன்கிழமை 'ஈழநாடு' சைக்கிளோட்டப் போட்டிக்காகவே இந்த அரிய பயிற்சி நடக்கிறது.

### இரு போட்டிகள்

மாணவர்களுக்கு ஒரு போட்டி. வயது வந்தவர்களுக்கு ஒரு போட்டி. யாழ். கோட்டையைச் சுற்றிசுற்றி ஐந்தமைல் போட்டி மாணவர்களுக்கு நடக்கும். வயது வந்தவர்களுக்கும் கோட்டையைச் சுற்றியே பத்து மைல் போட்டி நடைபெறும்.

புதன்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு மாணவர் போட்டி ஆரம்பமாகிவிடும். அதையடுத்து அரைமணி நேரத்தின் பின்னர் வயது வந்தவர்கள் போட்டி தொடங்கிவிடும்.

### பரிசுகள்

மாணவர் போட்டியில் முதலாவதாக வரும் வீரருக்கு பி. எஸ். ஏ. சைக்கிள் வழங்கப்படும். இரண்டாவது பரிசாக கிரிக்கெட் விளையாட அருமையான ஒரு கிரிக்கெட் மட்டை கொடுக்கப்படும். வயது வந்தவர்களுக்கான போட்டியில் முதற்பரிசு பி. எஸ். ஏ. சைக்கிள் வழங்கப்படும். இரண்டாவது பரிசாக இரண்டடுக்கு "டிபன்கேரியர்".

### கார்கில்ஸ

கார்கில்ஸ் கம்பனியார் இந்தப்பரிசுகளை வழங்க முன்வந்துள்ளனர். கார்கில்ஸ் கம்பனியைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. இவர்கள் உறுதியான அழகான அருமையான பி. எஸ். ஏ. சைக்கிள்களின் மொத்த இறக்குமதியாளர்கள். இவர்கள்தான் நமக்கு இந்த பி. எஸ். ஏ. சைக்கிள்களை தருபவர்கள்!

### ஆதரவு

'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் ஆதரவில் சைக்கிளோட்டப்போட்டியொன்று நடக்கப் போகிறது என்றதும் பல்வேறு துறையிலிருப்பவர்களும் தமது பூரண ஆதரவைத்தர முன்வந்துள்ளார்கள். யாழ்ப்பாணப் பொலிஸ் பகுதியினர் இந்தப் போட்டிக்கு பூரண ஆதரவைத்தந்துள்ளதுடன், ஏற்பாடுகளையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. லொக்ஸோதான் இந்தப் போட்டிக்கு அமைப்பாளராக இருக்கிறார்.

### இவர்கள் மத்தியஸ்தர்கள்

சைக்கிளோட்டப்போட்டியின்போது மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றவிருப்பவர்கள் இவர்கள்தான்: யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர்களான திரு. எஸ். வி. மாணிக்கவாசகர், திரு எஸ். நடேசன், கட்சன், செல்வராசா, கப்பிரிண்டன் என்ஜினியர் எஸ். பத்மநாதன், எஸ். சிவஞானம், ஏ. குமாரையா, ஆர். இரத்தினசிங்கம், கே. ஆர். வேலுப்பிள்ளை, க. நாகரத்தினம், எஸ். இராஜேந்திரா.

யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் அன்றிரவு நடக்கும் வைபவத்தில் அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா வெற்றி வீரர்களுக்கு பரிசுகளைக் கொடுப்பார்.

---

## தேயிலை

(1ம்பக்கத் தொடர்ச்சி)

சாலிக அதிபர் தலைமையில் திருக்கோணமலைத் துறை மூலச்சபையொன்று நிறுவப்படும் இந்த சபை திருமலைத் துறைமுகம் சம்பந்தமான அன்றாடப் பிரச்னைகளை ஆராய்ந்து தீர்வு காணும். அரசாங்க அதிபர் தலைமையில் உள்ள துறைமுகச் சபையில் தொழில் இலாகா பிரதிநிதி, கப்பல் கம்பனிப் பிரதிநிதி, ஸ்டீவடோர் கொந்தராத்துக்காரர் பிரதிநிதி, தேயிலை வர்த்தக சங்கப் பிரதிநிதி, தொழிலாளர்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள்.

## மாவுக்கு ரேஷன் இல்லை

கொழும்பு, சனி

கோதுமைமாவுக்குரேஷன் ஏற்படுத்தவதில்லையென்று உணவுமந்திரி திரு. எம். டி. பண்டா முடிவு செய்திருக்கிறார்.

கையிருப்பிலிருக்கும் மாவு இப்போதிருப்பதாலும் விரைவில் ஏராளமான மாவு இறக்குமதியாகவிருப்பதாலும் பங்கீட்டு முறையின்கீழ் அதனைக் கொண்டுவருவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைரேவும், டேவிசும் முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்தனர். டேவிஸ் எழு ரன்கள் எடுத்தபின், விமலரத்னவின் பந்துக்கு விக்கெட்டுக்குப் பின்னால் எச். ஐ. கே. பெர்னாண்டோவால் பந்து பிடிக்கப்பட்டு அவுட்டானார். இலங்கைப் பந்து வீச்சுக்காரரான பி. ஐ. பீரிஸ், விமலரத்னவும் பந்தை நன்றாக வீசி, மேற்கிந்திய தடுப்பு வீரர்களை அமைதியாக விளையாடச் செய்தனர். மெல்லமெல்லமாகவே ரன்கள் வந்தன. ஓரளவு நன்றாக விளையாடிக்கொண்டிருந்த நேர்ஸ் அடுத்து அவுட்டாகினார். அவர் விமலரத்னவின் பந்துக்கு எல். பி. டபிள்யூ எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, தமது விக்கெட்டை 22 ரன்கள் எடுத்தபின் இழந்தார்.

ஆரம்பத்திலிருந்தே ஆறுதலாகவும், கவனமாகவும் விளையாடிக்கொண்டிருந்த வைரேவுடன், இப்போது புச்சர் வந்து சேர்ந்து தடுப்பெடுத்தாடினார். வைரேவிலும் பார்க்கத் துரிதமாக புச்சர் தனது ரன்களை எடுத்தார். ஏறத்தாழ இரண்டு மணித்தியாலங்களாக மெதுவாக தடுப்பெடுத்தாடிய வைரே, ஈற்றில் 43 ரன்களுடன் நீல் சண்முகத்தின் பந்துவீச்சுக்கு ஹைமினிலால் பந்து பிடிக்கப்பட்டு அவுட் ஆனார். அவருடைய இடத்துக்கு மேற்கிந்தீசின் புகழ்பெற்ற இடதுகை தடுப்பு வீரரான லொயிட் வந்தார்.

தேநீர் இடைவேளையின் போது புச்சர் 50 ரன்களும், லொயிட் 15 ரன்களும் எடுத்திருந்தனர். மேற்கிந்தீஸ் ஸ்கோர் 3 விக்கெட் நட்டத்துக்கு 142 ரன்களாக இருந்தது.

## 'நாடு முன்னேறும்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சிங்களவர் சோனகர் ஆகியோர் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் தோட்டத் தொழிலாளர்களை இந்தியர்கள், அநாதைகள் கள்ளத்தோணிகள் என வைகின்றார்கள். ஒதுக்கியும் வைக்கின்றார்கள். ஆனால் அவர்களின் தாழ்மை எண்ணங்களை மாற்றி அவர்களும் மனிதர்களே என்று எண்ணச்செய்த பெருமை இ. தொ. கா வையே சாரும்.

நாட்டுக்கு நன்மை பயக்கும் சகல திட்டங்களையும் ஆதரிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். எமது கட்சியினரின் 50 ஆயிரம் வாக்குகளை ஜனநாயக வாதியைத் தலைமையிற் கொண்ட ஐக்கிய தேசிய கட்சிக்குக் கொடுத்தோம். நாம் உறுதியுடனும் கட்டுக்கோப்புடனும் இருந்து நமது சமுதாய வளர்ச்சியினை நோக்கமாகக் கொண்டு சிறந்த பணியாற்றவேண்டும். தேசம் முன்னேறும் வேளையில்தான் நாமும் முன்னேறலாம்" என்றார்.

---

குரும்பசிட்டி, சனி

ஏழாலைகிராமச்சபை ஆதரவில் நிறுவப்பட்டுள்ள சித்த ஆயுள்வேத ஆஸ்பத்திரியை உடமைகுதி தலஸ்தாபன கமிஷனர் திரு எஸ். சி. மாணிக்கவாசகர் திறந்து வைப்பார். இம்மாதம் 25-ந்திகதி இத்திறப்புவிழா நிகழவிருக்கின்றது.

## முல்லைத்தீவில்

# காணமல் போன சிறுவன் புதைக்கப்பட்டிருந்தான்

### பொலிசார் கண்டுபிடித்தனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

முல்லைத்தீவில் ஒரு வீட்டு வளவுக்கு அருகாமையில் 9 வயதுடைய ஒரு சிறுவன் புதைக்கப்பட்டிருந்ததை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். இந்தசிறுவன் கடந்த 18 நாட்களாக பெற்றோரால் தேடப்பட்டு வந்தார். இவரது சடலம் துணியொன்றினுல் சுற்றப்பட்டுக் கிடந்ததாம்.

இது சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக யாழ்ப்பாணப் பொலிஸ் சுப்ரீண்டன் திரு ஆர். சுந்தரலிங்கம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் அங்குசென்றுள்ளார்கள்.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜனவரி 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மாவட்ட சபைகள்:

# 134 ஸ்தலஸ்தாபனங்கள் ஆட்சேபித்துள்ளன

## பீலிக்ஸ் எழுப்பிய கேள்விக்கு உதவி அமைச்சர் பதில்

கொழும்பு, சனி

மாவட்டசபைகள் நிறுவப்படுவதை ஆட்சேபித்து 134 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளூராட்சி அமைச்சுக்கு மகஜர் சமர்ப்பித்துள்ளன.

மாவட்டசபைகள் சம்பந்தமாக உள்ளூராட்சி மந்திரிக்கு 143 மன்றங்கள் எழுதியுள்ளன. இவைகளில் 134 மன்றங்கள் மாவட்டசபைகள் உருவாவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் 7 மன்றங்கள் மாவட்ட சபைகள் பற்றி சந்தேகமான கருத்துக்களைத் தெரிவித்தும் உள்ளன.

இத்தகவலை உள்ளூராட்சித்துறை உதவிமந்திரி திரு. ஆர். பிரேமதாஸ இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

தொம்பே எம். பி. திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மாவட்டசபைகள் மசோதா பற்றி எழுப்பிய கேள்வியொன்றுக்கு உள்ளூராட்சி உதவி மந்திரி திரு. பிரேமதாஸா பதிலளித்தார். அப்போது அவர் மாவட்டசபைகள் அமைக்கப்படுவதை ஆட்சேபித்து 134 மன்றங்கள் எழுதியிருப்பதாகவும், 7 மன்றங்கள் சந்தேகம் தெரிவித்திருப்பதாகவும் கூறினார்.

இந்த மன்றங்களில் 4 நகர சபைகள். அவை மடுகஸ்லை, கழுத்துறை, கேகாலை, வெலிகம ஆகியவை. 5 பட்டின சபைகளும் ஆட்சேபித்துள்ளன. அவை சந்தளாய், மஹரகம, மாதம்பை, தம்புல்ல, வாதுவை ஆகியன. 2 மாநகரசபைகளும் மாவட்ட சபைகள் உருவாகுவதை ஆட்சேபித்துள்ளன. தெஹிவளை-கல்கிசை, வெலிகம, கண்டி ஆகியவையே அவை. மீதியிருக்கும் மன்றங்கள் அனைத்தும் கிராமசபைகள்.

இந்தத் தகவல்களை வெளியிட்ட உள்ளூராட்சி உதவி மந்திரி மாவட்டசபைகள் அமுலுக்குக் கொண்டுவரும்போது தற்போது இருந்து வரும் உள்ளூராட்சி மன்றங்களின் சுயநிர்ணய உரிமைகள் அல்லது அதிகாரங்கள் தடுக்கப்படமாட்டாது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org